செ.வெ.எண் : 56 / ஜூன் நாள் : 29.06.2017

## இராமநாதபுரம் மாவட்டம்

## மாவட்டத்தில் பணிபுரியும் அனைத்து அரசுத்துறை அலுவலர்களின் பணிப்பதிவேடுகளை மின்னணு மயமாக்குதல் (Digitalizing Service Register) குறித்த ஆலோசனைக் கூட்டம்

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் இன்று (29.06.2017) மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், மாவட்டத்தில் பணிபுரியும் அனைத்து அரசுத்துறை அலுவலர்களின் பணிப்பதிவேடுகளை மின்னணு மயமாக்குதல் (Digitalizing Service Register) குறித்த ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது:

அரசுத் துறைகளில் பணிபுரியும் அரசு பணியாளர்கள் பணியில் இருக்கும் போது அவர்களது பணிப்பதிவேட்டினை முறையாக பராமரிக்காமல் இருக்கும் பட்சத்தில், பணியிலிருந்து ஓய்வு பெறும் பொழுது உரிய பணப்பலன்களை பெறுவதில் சிரமம் ஏற்படுகின்றது. இத்தகைய சூழ்நிலைகளை தவிர்த்திடும் வகையில் , ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் அரசுப் பணியாளர்களின் பணிப்பதிவேடுகளை மின்னணு மயமாக்குதல் திட்டம் துவங்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இராமநாதபுரம் மாவட்டத்தில் பல்வேறு அரசுத் துறைகளின் கீழ் மொத்தம் 21 ஆயிரத்து 543 அரசுப் பணியாளர்கள் பணியாற்றி வருகின்றனர். அவற்றில் இதுவரை 3 ஆயிரத்து 71 பணியாளர்களின் பணிப்பதிவேடுகள் மின்னணு மயமாக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 18 ஆயித்து 472 பணியாளர்களின் பணிப்பதிவேடுகளையும் மின்னணு மயமாக்குவதற்கான உரிய நடவடிக்கைகளை அந்தந்த துறை சார்ந்த கணக்கு அலுவலர்கள் கருவூலத்துறை அலுலவர்களுடன் ஒருங்கிணைந்து துரிதமாக மேற்கொண்டு மூன்று மாத காலத்திற்குள் இப்பணிகளை நூறு சதவீதம் நிறைவேற்றிட வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட கருவூல அலுவலர் திரு.அ.கபீபு, மாவட்டஆட்சியரின் நேர்முகஉதவியாளர் (பொது) திரு.சேதுமாதவன், மாவட்டஆட்சியரின் நேர்முக உதவியாளர் (கணக்கு) திரு.சேஷன் உள்பட அனைத்து துறைகளைச் சார்ந்த கணக்கு அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**